O.S. No: 55/2022
பெயர்: சோமசுந்தரம்
**பி.சா. 4**
09-01-2026

**குறுக்கு விசாரணை**

தாவா சொத்து என் பாட்டி ராஜாமணியம்மாள் பெயரில் 1954 இல் வாங்கப்பட்ட சொத்து என்றால் ஆமாம் . ராஜாமணியம்மாளுக்கு வாதி சண்முகம் என் தகப்பனார் செல்வகணபதி மற்றும் 3 ஆம் பிரதிவாதி ருக்மணி ஆகியோர் பிள்ளைகள் என்றால் ஆமாம் . என் பாட்டி ராஜாமணியம்மாள் உயில் போன்று எந்த ஒரு ஆவணமும் எழுதி வைக்காமல் தான் இறந்தார் . எனவே மேற்சொன்ன 3 வாரிசுகளுக்கும் தாவா சொத்தில் சமமான உரிமை உள்ளது என்றால் ஆமாம் . ராஜாமணியம்மாள் 1980 லும், அவருக்கு முன்பே அவருடைய கணவர் சோமசுந்தரம் 1971 லும் இறந்துவிட்டார் என்றால் ஆமாம் . என் தகப்பனார்செல்வகணபதி 09/08/2017 இல் இறந்தார் என்றார் என்றால் ஆமாம். என் தகப்பனார் BSNL லில் சீனியர் செக்சன் சூப்பர் வைசராக இருந்து ஓய்வு பெற்றார். என் சித்தப்பா நரசுஸ் கம்பெனியில் வேலையில் பார்த்து எந்த ஒரு குற்றச்சாட்டும் இல்லாமல் பணி ஓய்வு பெற்றார் என்றால் பணி ஓய்வு பெற்றது தெரியும் . எந்த குற்றச்சாட்டும் இல்லாமல் ஓய்வு பெற்றாரா என்று தெரியாது . வழக்கு சொத்தில் ரோட்டை ஒட்டி வடபுறத்தில் ஒரு பழைய ஓட்டு வீடு இன்றும் உள்ளது என்றால் ஆமாம் . அந்த வீட்டில் தான் நான் , என் தகப்பனார், என் தாயார் ஆகியோர் 2017 வரை குடியிருந்தோம் என்றால் இன்றுவரை அங்கு தான் குடியிருக்கிறோம். இதற்கு பின்னால் வடபுறம் ஒரு பழைய ஓட்டு வீடு இருந்தது என்றால் 25 வருடத்திற்கு முன்பு இருந்தது . அந்த ஓட்டு வீட்டில் தான் இந்த வழக்கின் வாதி குடியிருந்தார் என்றால் ஆமாம் . இதற்கு பின்னால் 150 அடி நீளத்திற்கு கொல்லை என்றால் ஆமாம் .

கொல்லை புறத்தில் ஒரு பலா மரம் , ஒரு மா மரம், 10 தென்னை மரம் உள்ளது. கொல்லை கடைசியில் தான் செப்டிக் டேங்க் உள்ளது. எங்கள் வீட்டின் கழிவுகளும் , வாதி வீட்டின் கழிவுகளும் அந்த செப்டிக் டேங்கிற்கு தான் போகும் என்றால் ஆமாம் . இந்த இரண்டு வீட்டிற்கு கீழ்புறம் கொல்லைவரை 206 அடி நீளம் மற்றும் 10 அடி அகலத்திற்கு ஒரு பொது பாதை உள்ளதா என்றால் பொது பாதை எதுவும் கிடையாது. 3 அடி அகலத்தில் இடம் இருந்தது. அந்த வழியாக அனைவரும் போகவர இருப்போம். இன்றும் 10 அடி அகலத்திற்கு பொது பாதை உள்ளது என்றாலும், வழக்கிற்காக இல்லை என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி பழைய வீட்டை இடித்து RCC கட்டிடம் 2002 இல் கட்டியுள்ளார் என்றால் ஆமாம் . 2007 இல் முதல் தளம் கட்டினார் என்றால் எனக்கு தெரியாது. அப்போது நான் இங்கு இல்லை. வாதி 2002 இல் இவ்வாறு வீடு கட்டும் போது, என் தகப்பனார் உயிருடன் தான் இருந்தார். ஆனால் அவர் சம்மதத்துடன் கட்டவில்லை. என் அப்பா அவ்வாறு கட்டக்கூடாது என்று ஏதாவது நோட்டீஸ் கொடுத்தாரா, வழக்கு தாக்கல் செய்தாரா என்றால் தனக்கு உடன்பாடு இல்லை என்று வாயால் சொன்னது தான். வாதிக்கு என் தகப்பனார் தான் நின்று வீட்டை கட்டிக்கொடுத்தார் என்றாலும் அவர் இறந்த பிறகு நாங்கள் வாதியிடம் பிரச்சினை செய்கிறோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 1 நாங்கள் பாகம் செய்துக்கொண்ட பத்திரம் அதில், பக்கம் 18 இல் ரோட்டு பக்கத்தில் கீழமேல் அகலம் 28 அடி, போக போக முடியும் இடத்தில் கிழமேல் அகலம் 37 ஆக முடிகிறது. தென்வடல் நீளம் மேல்புறம் 206 அடியும், கீழ்புறம் 205 அடியும் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம் . இதில் காட்டப்பட்டுள்ள A அட்டவணை சொத்து வாதிக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அவருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் கிழமேல் 32 அடி என்றால் ஆமாம். அவர் வீடு கட்டியிருப்பது கிழமேல் 22, தென்வடல் 30

அடிக்கு வீடு கட்டியிருக்கிறார் என்றால் சரி. 22 அடிக்கு வீடு கட்டியது போக மீதி 10 அடி பாதையாக உள்ளது என்றால் அந்த இடம் பாதை கிடையாது. B செட்டியூல் ருக்மணிக்கு கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம். இந்த B செட்டியூலில் தான் வாதியும் நாங்களும் புழங்கும் செப்டிக் டேங்க் உள்ளது என்றால் ஆமாம் . செப்டிக் டேங்க் உள்ள பகுதியை அனைவருக்கும் பொது என்று பிரிக்கப்படவில்லை என்றால் சரி. நாளைக்கே ருக்மணி தன் இடத்தில் இருக்கும் செப்டிக் டேங்கை யாரும் புழங்கக்கூடாது என்று சொன்னால் நாங்கள் புழங்க முடியாது என்றால் சரி. அது குறித்து பாக பத்திரத்தில் எழுதப்படவில்லை என்றால் சரி. பாத்திரம் கழுவும் நீர் செல்லும் வகையில் கீழ புறத்தில் கடைசி வரை 5 அடி பொது பாதை கீழ்புறத்தில் காம்பௌண்ட் சுவர் ஒட்டி கடைசி கொல்லை வரை போகிறது என்றால் ஆமாம் . இந்த சாக்கடை வழியாக தான் நாங்கள் புழங்கும் தண்ணியாக இருந்தாலும் வாதி புழங்கும் தண்ணியாக இருந்தாலும் கடைசியில் கொல்லையில் இருக்கும் மரங்களுக்கு போகிறது. வழக்கு சொத்தின் கீழ்புறம் உள்ள சுவர் தனக்கு சொந்தம் என்று கீழ்புறம் உள்ளவர் வழக்கு தொடர்ந்து அதை என் தகப்பனாரும் வாதியும் நடத்தினார்கள் . கீழ்புறம் முழுவதுமாக சுவர் கிடையாது. ஒரு 40 அடிக்கு தான் சுவர் உள்ளது . கடைசியில் என் தகப்பனாரும் சண்முகமும் வழக்கு நடத்தி கீழபுறம் உள்ள சுவர் எங்களுக்கு சொந்தம் என்று தீர்ப்பாகிவிட்டது. அந்த கீழ்புற சுவர் 1 அடி, சாக்கடை 1 அடி ஆகிய இரண்டும் 5 அடி பொது பாதையில் தான் வருகிறது என்றால் இல்லை. எங்களுடைய 58 அடி நீளத்தில் கீழபுற சுவரின் மொத்த நீளம் 40 அடி தான் வருகிறது. எங்கள் இடத்திலேயே இந்த 40 அடி சுவர் முடிந்துவிடுகிறது. சாக்கடை 53 வது அடியில் தான் ஆரம்பித்து 100 அடி வரை போகிறது. அதன் பின்னர் மரம் இருப்பதால் பூமியில் போய்விடுகிறது. சாக்கடையின் அகலம் 1/2 அடி தான், 1 அடி

கிடையாது. வாதியின் மாடிபடி 3 அடி கீழ்புறம் சுவற்றை ஒட்டி முதல் தளத்திற்கு போவதற்காக உள்ளது. மாடிபடியும் முதல் தளமும் 2002லேயே கட்டப்பட்டது. என் அப்பா சம்மதம் கொடுக்கவில்லை. பில்லர் போட்டு தான் மாடிபடி கட்டப்பட்டது என்றால் தவறு. மாடிபடியை இடித்தால் வாதியின் தரை தளத்திற்கும் முதல் தளத்திற்கும் டேமேஜ் ஏற்படும் என்றால் இல்லை. கீழ்புறம் மாடிபடி 3 அடி, கட்டிடம் 22 அடி போக இன்னும் 7 அடி பொது பாதையாக உள்ளது என்றால் இல்லை. தற்போது அந்தவழியாக தான் கொல்லைக்கு போய்வருகிறோம் என்றால் போகவழியில்லை. அதை பூட்டிவிட்டார்கள். நான் போன மாதம் வந்து தேங்காய் பறித்தேன் என்றால் இல்லை. தற்பொழுதுள்ள அமைப்பு கொல்லைவரை போவதற்கு சுலபமாக இருக்கிறது என்றாலும் மாடிபடியை இடிக்க தேவையில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 1 இல் மாடிபடியை இடித்து கொடுக்க வேண்டும் என்ற வாசகம் இல்லை என்றால் மாடிபடி என்ற வார்த்தை இல்லை. ஆனால் பொது வழிக்கு எந்த இடையூறும் இல்லாமல் இருக்க வேண்டும் என்று உள்ளது. இருந்த அமைப்பு அவ்வாறேதான் இருக்க வேண்டும் என்று பேசி தான் பாகப்பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. மாடிபடியை வாதி இடித்து கொடுக்க வேண்டும் என்பது தான் என்னுடைய வழக்கு என்றால் ஆமாம். ஆனால், வாதி அவ்வாறு மாடிபடியை இடித்து கொடுக்க எந்த காலத்திலும் பேசப்படவும் இல்லை எழுதப்படவும் இல்லை என்று இடித்து கொடுக்க மறுத்துவிட்டார் என்றால் தவறு. மாடிபடியை இடித்து கொடுக்க ஒப்புக்கொண்டு தனியாக வாதி எந்த ஆவணமும் எழுதி கொடுக்கவில்லை. பாகப்பிரிவினை பத்திரம் தான் அந்த ஆவணம். என் எதிர் வழக்குரையில் வாதி மாடிபடியை இடிக்க யார் முன்னிலையில் எப்பொழுது ஒப்புக்கொண்டார் என்று குறிப்பிட்டிருக்கிறேனா என்றால் இல்லை. வாதி மாடிபடியை இடித்து கொடுப்பதாக ஒப்புக்கொள்ளவில்லை

என்றாலும் எந்த மத்தியஸ்தர்கள் முன்னிலையில் பேசப்படவில்லை என்றாலும் வழக்கிற்காக அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் கொல்லை பக்கம் ஒரு கேணி உள்ளது. அதை வாதி புழங்கி வருகிறார் . நாங்கள் புழங்கி வந்தோம் . தற்போது புழங்க அனுமதிக்கவில்லை. 5 அடி பொது பாதை கணக்குபடி கேணி 2 அடி இடிப்படும் என்றால் தவறு . நாங்கள் பொது பாதை வழியாக கொல்லை புறம் போவதை வாதி எந்த காலத்திலும் தடுத்தது கிடையாது என்றாலும் வழக்கிற்காக அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல . வா.சா.ஆ. 11 2002 இல் வாதி வீட்டை கிரஹபிரவேசம் பண்ணிய பத்திரிக்கை என்றால் ஆமாம். இதில் விஸ்வலிங்கம் செட்டியார் என்பது வாதியின் சித்தப்பா. அவர் தான் அனைவரையும் அழைப்பதாக கண்டு பத்திரிக்கை உள்ளது என்றால் ஆமாம் . அதற்கு கீழ் என் தகப்பனார் பெயரும் தாயார் பெயரும் கண்டுள்ளது என்றால் ஆமாம் . அதற்கு கீழ் தான் வாதியின் பெயரும் , வாதியின் மனைவி பெயரும் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம் . என்னுடைய தகப்பனார் சம்மதம் இன்றி வாதி வீடு கட்டியிருந்தால் , அவருடைய சித்தப்பாவோ, என்னுடைய அப்பாவோ அழைப்பாளர்களாக பத்திரிக்கையில் போடப்பட்டிருக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 12 இல் என் தகப்பனார், தாயார் வாதி அவருடைய மனைவி ஆகியோர் இருக்கிறார்கள் என்றால் அது எங்கள் வீட்டில் இருந்து எடுக்கப்பட்ட புகைப்படம் . என் தகப்பனார் உயிருடன் இருக்கும் வரை வாதியுடன் சுமுகமான உறவில் இருந்தார் என்றாலும் அவர் இறப்பிற்கு பின்னர் இவ்வாறு பத்திரத்தை ஏற்படுத்தி வாதிக்கு தொல்லை கொடுத்து வருகிறோம் என்றால் சரியல்ல . என் தகப்பனார் இறந்தது 2017 இல். 2018 இல் என் தகப்பனார் பெயரில் வா.சா.ஆ.1 இல் உள்ளது என்றால் சரி . இது ஏற்பட்ட தேதி 16/08/2018 என்றால் சரி. என் தகப்பனார் இறந்து 1 வருடம் கழித்து என் தகப்பனார்

பெயரில் இந்த சொத்தை நான் தான் மாற்றினேன் என்றால் சரியல்ல . என் தகப்பனார் இறந்ததில் இருந்து இந்த சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நான் இருந்து வந்தேன் என்றாலும் அதனால் தான் இந்த மாடிபடி சம்மந்தமாக பிரச்சினை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. இந்த பாகப்பத்திரத்தின் படி 3 பேருக்கும் பொதுவில் வாகனம் நிறுத்த இடம் ஒதுக்கப்படவில்லை. வாதி என் மீதிருந்த நம்பிக்கையின் பேரில் தான் பத்திரத்தை படித்து பார்க்காமல் கையெழுத்து போட்டார் என்றால் தவறு. பத்திர எழுத்தரை பார்த்தது, பத்திரம் எழுதியது என்று நான் தான் முன்னின்று பார்த்தேன் என்றால் சரியல்ல . பொதுவாக நான் ஏதாவது எழுத ஆரம்பித்தால் பிள்ளையார் சுழி போட்டு ஓம் என்று எழுதிதான் எழுத ஆரம்பிப்பேன் என்றால் ஆமாம் . அது போல் தான் என்னிடம் காட்டப்படும் ஆவணத்திலும் எழுதப்பட்டுள்ளது என்றால் அது என்னால் எழுதப்பட்டது தான். அது **வா.சா.ஆ.17 ஆகும்.** அதில் பத்திரம் எழுதுவதற்கு என்ன செலவு, யார் யார் எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் என்று நான் தான் என் கைப்பட எழுதியுள்ளேன் என்றால் ஆமாம். அதில் சேகர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது வாதி சண்முகம் . 2 வது ருக்மணி. 3 வது என்னுடைய செலவு. பத்திர எழுத்தரை பார்த்து நான் முன்னின்று செய்ததால் தான் இவ்வாறு என் கைப்பட வா.சா.ஆ– 17 எழுதியுள்ளேன் என்றால் தவறு. பத்திர பதிவு முடிந்த பிறகு வரவு செலவு கணக்கு என்ன, யாருக்கு எவ்வளவு திருப்பி தரவேண்டும் என்ற விவரம் 23/10/2021 இல் வாட்ஸ்அப் குருப்பில் நான் தான் அனுப்பியுள்ளேன் என்றால் ஆமாம். பாகப்பிரிவினைக்கு பிறகு நான் தான் இந்த வாட்ஸ் அப் குருப்பையே உருவாக்கினேன் . அதன் நகல்கள் **வா.சா.ஆ. 18 ஆகும்.** இதில் பித்தளை பாத்திரங்கள் யார் யார் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான் தான் குறித்துள்ளேன் என்றால் அனைவரும் சேர்ந்து பேசி முடிவு எடுத்தது ஆகும் . இதில், எழுத்தர்

செலவு, பதிவு செலவு ஆகியவற்றை ஜார்ட் போட்டு சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம். இதில் சேகர் அண்ணா என்று சித்தப்பாவை குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் அவ்வாறு தான் கூப்பிடுவேன். வா.சா.ஆ. 17, வா.சா.ஆ. 18 இன் படி அனைத்து வரவு செலவு கணக்குகளையும் நான் தான் பார்த்திருக்கிறேன் என்றாலும் வாதி பத்திரம் பதிவு செய்யும் அன்று தான் அலுவலகத்திற்கு வந்தார் என்றாலும் அவருக்கு பத்திரத்திலுள்ள விவரங்கள் தெரியாது , அண்ணன் மகன் என்ற நம்பிக்கையின் பேரில் தான் கையெழுத்து செய்தார் என்றால் சரியல்ல. மாடிபடியை இடிப்பதற்காக பேசப்படவில்லை, இடிக்க முடியாது என்று வாதி சொன்ன பிறகு நான் அவர் மீது வழக்கு எதுவும் போட்டேனா என்றால் இல்லை. மாடிபடி இடிப்பது சம்மந்தமாக பேசப்படாததாலும் அதற்கு எந்த ஆதாரமும் இல்லாததால் தான் நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் மாடிபடியை இடித்து கொடுக்க வேண்டும் என்று நான் எதிர் கோரிக்கை எதுவும் இந்த வழக்கில் வைத்தேனா என்றால் இல்லை. ஆனால் எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளேன். இப்போதுள்ள அளவுகளின் படியே 6 அடி பொது பாதை உள்ளது என்றாலும் , தொந்தரவு செய்தால் அவர் இடத்தை கொடுத்துவிட்டு போய்விடுவார் என்பதால் தான் இவ்வாறு செய்கிறேன் என்றால் சரியல்ல. தற்பொழுது மீண்டும் நீதிமன்றம் மூலமாக எந்தவித பிரச்சினையும் இல்லாமல் பாகம் பிரிப்பதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் உள்ளது. ஏற்கனவே பாகம் பிரித்து நடைமுறையில் உள்ளவாறு பாகப்பிரிவினை பத்திரப்படி அனுபவிப்பதையே நான் விரும்புகிறேன். 3 ஆம் பிரதிவாதிக்கு பாகப்பத்திரத்தில் குறைவான வீதமே கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் முறையாக நீதிமன்றம் மூலமாக பிரித்தால் அவருக்கு கூடுதல் விஸ்தீர்ணம் கிடைக்க கூடும் என்பதால் தான் நான் மறுக்கிறேன் என்றால் சரியல்ல . வாதிக்கு ஆண் வாரிசு

கிடையாது. ஒரு பெண் குழந்தை தான். ஆண் வாரிசு இல்லாததால் தான் அந்த சொத்தையும் அடைய விரும்பி நான் பட்டா பெயர் மாற்றம் செய்தேன் என்றாலும், தற்பொழுது மாடிபடியை இடிக்க முயற்சி செய்தால் சொத்தை என்னிடம் கொடுத்துவிட்டு சென்று விடுவார் என்று இவ்வாறு செய்கிறேன் என்றால் சரியல்ல . வாதி கோரிய படி முறையாக தாவா சொத்து பிரிக்கப்பட வேண்டும் என்றாலும் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.